**விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 4454/ அ3 / 2021 நாள் . 22.10.2024**

**பொருள்** : பள்ளிக்கல்வி - கருணை அடிப்படை பணி நியமனம் - விழுப்புரம் மாவட்டம் – கண்டாச்சிபுரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி – இடைநிலை ஆசிரியர் (மறைவு) - திருமதி.P.மணி என்பாரின் மகளுமான திருமதி.பா.சுபஸ்ரீ என்பார் - இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை-
1. அரசாணை(நிலை) எண்.101,பள்ளிக்கல்வி (வரவு செலவு திட்டம் துறை நாள். 18.05.2018.
2. அரசாணை(நிலை) எண்.100 பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (எம்)த்துறை, நாள். 01.08.2018.
3. அரசாணை(நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை நாள். 23.01.2020
4. அரசாணை(நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை நாள். 26.02.2021.
5. அரசாணை (நிலை) எண் 151 பள்ளிக் கல்வித்துறை நாள் 18.09.2022.
6. அரசாணை(நிலை) எண்.33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (கியூ1)த் துறை நாள். 08.03.2023.
7. அரசு கடிதம் (efile) எண் 4419/தொ.க.1(1)/2024-1 நாள். 17.05.2024.
8. விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.4454/அ3/2021 நாள்.12.10.2022 மற்றும் 23.06.2023.
9. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.066008/ஜே/இ1/2023 நாள்.13.08.2024.

**********

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், கண்டாச்சிபுரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியர் ஆகப் பணிபுரிந்து, பணிக்காலத்தில் 31.01.2014-ல் காலமான திருமதி.P.மணி என்பாரின் வாரிசும் மகளுமான திருமதி.பா.சுபஸ்ரீ என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கோரியுள்ளதன் தொடர்ச்சியாக, அவர் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்து உள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்து உள்ளதன் அடிப்படையில், அன்னார், தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ், பள்ளிக் கல்வித் துறையில் பார்வை-8ல் காணும் செயல்முறைகளின்படி, ஆலம்பாடி, அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். அன்னார் பணிநியமனம் செய்யப்படும் போது வயது 27 ஆகும்.

பார்வை -2ல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறத்தேவையில்லை என்பதாலும், பார்வை-7ல் காணும் அரசு கடிதத்தின்படி, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing authority) அவரவர் கட்டுப்பாட்டில் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணி அமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன் முறை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பார்வை-9-ல் காணும் இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் அறிவுரைகளின்படியும் பார்வை-5ல் காணும் அரசாணையின்படி, நியமன அலுவலர் விழுப்புரம் முதன்மைக்கல்விஅலுவலர் என்ற முறையில்

..த.பி.பா..

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியர் ஆகப் பணிபுரிந்த (மறைவு) திருமதி.Pமணி என்பவரின் வாரிசும் மகளுமான திருமதி.பா.சுபஸ்ரீ என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கல்வித் துறையின் கீழ் 14.10.2022முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிபுரிந்து வரும் நிலையில், அன்னாரது பணியினை அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்கவேண்டும் என்பதன் நிபந்தனையுடன் 14.10.2022முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன் செய்யப்படுவதால் அவர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைகள் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட பின்னர் அனுமதிக்கப்படும் என்பதை சார்ந்த பணியாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் திருமதி.பா.சுபஸ்ரீ என்பாருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவக் காலத்திற்குள் இவர் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியிலும் கட்டாயம் தேர்ச்சி பெறவேண்டுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

இவருக்கு தற்போது பணிவரன் முறை செய்யப்படுவது இளநிலை உதவியாளர் பதவியில் முன்னுரிமையாக அமையாது என்றும், மாநில முன்னுரிமைப் பட்டியலின்படியே இவரது முன்னுரிமை அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள். | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1. | திருமதி.பா.சுபஸ்ரீ<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>ஆலம்பாடி. | 14.10.2022 முற்பகல் | 14.10.2022 முற்பகல் |

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்மந்தப்பட்டவரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறும் சார்ந்த தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது. அன்னாரது பணிப்பதிவேடு-(1) தொகுதி இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**இணைப்பு :**

1. பணிப்பதிவேடு – தொகுதி 1 அசல்.
2. அசல் கல்விச் சான்றுகள்

24/10/2024

முதன்மைக்கல்வி அலுவலர்,
விழுப்புரம்

TBN
22/10/2024

**பெறுநர்,**

திருமதி.பா.சுபஸ்ரீ,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, ஆலம்பாடி,
விழுப்புரம் மாவட்டம் (உரிய வழியாக).

**நகல்** - 1. தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ஆலம்பாடி.

2. சென்னை-6, பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.